தினமணி

# கடலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிப் பணிகள் தீவிரம்

First Published : 30 Oct 2010 12:00:00 AM IST



கடலூர் அருகே நாணமேடு கிராமத்தில் நட்டு 15 நாள்கள் ஆன சம்பா நெல் வயலில் களையெடுக்கும் பெண்கள்.

கடலூர், அக். 29: கடந்த 10 நாள்களாக அவ்வப்போது பரவலாக பெய்துவரும் மழை காரணமாக, கடலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிப் பணிகள் தீவிரம் அடைந்துள்ளன.

÷கடலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு, 2.41 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்படுகிறது. இதில் 1.25 லட்சம் ஏக்கர் காவிரி டெல்டா பாசனப் பகுதிகளாகும். இந்த ஆண்டு பி.பி.டி., பொன்னி, ஏடிடி 43 சம்பா நெல் ரகங்கள் அதிக அளவில் பயிரிடப்படுகின்றன.

÷கடலூர் மாவட்டத்தில் குறிப்பாக டெல்டா பாசனப் பகுதிகளில் 10 நாள்களாக ஆங்காங்கே பரவலாக மழை பெய்துள்ளது. இதனால் நாற்றங்கால் பணிகளும் நடவுப் பணிகளும் தீவிரம் அடைந்துள்ளன. கடலூர் மாவட்ட காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கும் சென்னை குடிநீருக்கும், கொள்ளிடம் கீழணையில் இருந்து 1,207 கன அடி வீதம் வெள்ளிக்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது. வீராணம் ஏரி பாசனத்துக்காக வடவாறில் 862 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

÷வெள்ளிக்கிழமை கடலூர் மாவட்டத்தில் உள்ள பிரதான ஏரிகளில் நீர்மட்டம், வீராணம் 43.6 அடி (மொத்த உயரம் 47.5 அடி), பெருமாள் 4.8 அடி (மொத்த உயரம் 6.5 அடி), வாலாஜா 5 அடி (மொத்த உயரம் 5.5 அடி) என இருந்தது. கொள்ளிடம் கீழணையில் நீர்மட்டம் 7.8 அடி (மொத்த உயரம் 9 அடி).

÷சம்பா சாகுபடி குறித்து வேளாண் துறை அளிக்கும் தகவல்: மாவட்டத்தில் 97 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது. இதுவரை 78,421 ஹெக்டேரில் நடவு முடிந்துள்ளது. காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் 44,988 ஹெக்டேரில் நடவுப் பணிகள் முடிந்துள்ளன.

÷பாசிமுத்தான் ஓடை விவசாயிகள் சங்கத் தலைவர் பி.ரவீந்திரன் கூறுகையில், ""வீராணம் ஏரியின் கடைமடைப் பகுதிகளில் நாற்றங்கால் பணிகள் முடிந்துள்ளன. நடவுப் பணிகள் தற்போது தொடங்கப்பட்டு உள்ளன. டெல்டா பாசனப் பகுதிகளில், சில நாள்களாக பெய்து வரும் மழை, கடைமடைப் பகுதிகளில் நடவுப் பணிகளுக்கு ஏற்றதாக உள்ளது. சம்பா நடவுப் பணிகள் நவம்பர் 20 வாக்கில், முடிவடையும்'' என்றார்.

÷சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு விவசாயிகள் சங்கத் தலைவர் விஜயகுமார் கூறுகையில், ""வீராணம் ஏரி பாசனப் பகுதிகளில் (50 ஆயிரம் ஏக்கர்) 20 சதவீதமும், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனப் பகுதிகளில் (44 ஆயிரம் ஏக்கர்) 5 சதவீதமும் மோட்டார் பம்ப்செட் வசதி உள்ளது. இப்பகுதிகளில் காவிரி நீரை எதிர்பார்க்காமல் முன்னரே சம்பா சாகுபடிப் பணிகள் தொடங்கப்பட்டன. அப்பகுதிகளில் நடவுப் பணிகள் முடிவுற்றுள்ளன.

÷தற்போது பெய்துள்ள மழை காரணமாக கடைமடைப் பகுதிகளுக்கு கூடுதலாக தண்ணீர் வரத் தொடங்கி இருக்கிறது. எனவே நாற்றங்கால் பணிகளும், நடவுப் பணிகளும் துரிதம் அடைந்துள்ளன'' என்றார்.

÷டெல்டா பாசனப் பகுதிகள் அல்லாத ஆழ்குழாய்ப் பாசனத்தை நம்பி இருக்கும் மற்ற பகுதிகளில் தற்போது, நடவுப் பணிகள் முடிந்துவிட்டன. நட்டு 15 நாள்கள் முடிவடைந்த வயல்களில் முதல் களையெடுக்கும் பணி நடந்து கொண்டு இருக்கிறது.

÷கடலூர் மாவட்டத்தில் சம்பா சாகுபடிக்குத் தேவையான விதைநெல், ரசாயன உரங்கள், நுண்ணுயிர் உரங்கள் முறையாக கையிருப்பில் உள்ளதால், சாகுபடிப் பணிகள் சிரமமின்றி நடைபெற்று வருவதாக விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

தண்ணீர் முறையாகக் கிடைத்து, இயற்கைச் சீற்றம் மற்றும் பூச்சி, பூஞ்சாணம் தாக்குதல்கள் இன்றி இருந்தால் கடலூர் மாவட்டத்தில், சம்பா பருவத்து நெல் உற்பத்தி 45 லட்சம் குவிண்டாலுக்கு மேல் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**காப்பீட்டுத் திட்டத்தில் சேர விவசாயிகளுக்கு அழைப்பு**

First Published : 30 Oct 2010 09:14:45 AM IST

நாமக்கல், அக். 29: சம்பா நெல் விவசாயிகள் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் சேர தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்ட நிறுவனம் அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பாக, நிறுவனத்தின் மண்டல மேலாளர் சி. அன்பரசு விடுத்துள்ள செய்தி:

தேசிய வேளாண் பயிர் காப்பீட்டுத் திட்டமானது கடந்த 3 ஆண்டுகளாக தமிழகத்தில் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2010ம் ஆண்டு நெல் சம்பா பயிருக்கு கடன் பெறாத விவசாயிகள் இத் திட்டத்தில் சேரலாம்.

இத் திட்டத்தில் சேருவதற்கான கடைசி நாள் டிச. 15ம் தேதியாக இருந்தாலும், வெள்ளம் மற்றும் வறட்சி குறித்து முன்பே தெரிந்தால் பிரீமியம் செலுத்துவது நிராகரிக்கப்படும். எனவே, வங்கிகளும், விவசாயிகளும் இத் திட்டத்தில் முன்பே இணைய அறிவுறுத்தப்படுகிறது.

நெல் சம்பா பயிருக்கு ஏக்கருக்கு சிறு, குறு விவசாயிகள் என்றால் பிரீமிய கட்டணம் | 117 செலுத்த வேண்டும். ஏனைய விவசாயிகள் | 130 செலுத்த வேண்டும். இதற்கு காப்பீடு மதிப்பு | 13024 மட்டுமே. பயிர்க்கடன் பெறாத விவசாயிகளின் விருப்பத்தின் பேரில் கூடுதல் பிரீமியம் செலுத்தினால் கூடுதல் பலன் பெறலாம்.

இத் திட்டத்தில் சேர, விவசாயிகள் வங்கியில் சேமிப்பு கணக்கு வைத்திருக்க வேண்டும். வங்கிகள், வேளாண்மைத்துறையிடம் விண்ணப்பம் பெறலாம். விவசாயிகள் தங்களது நிலம், பயிர் விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

**வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு காப்பீட்டுத் தொகை தருவதில்லை**

First Published : 30 Oct 2010 02:06:22 PM IST

கிருஷ்ணகிரி, அக்.29: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வறட்சி போன்ற இயற்கை காரணங்களால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு காப்பீட்டு நிறுவனங்கள் இழப்பீடுகளை வழங்குவதில்லை என விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் வி.அருண் ராய் தலைமை வகித்தார்.

இதில் பேசிய தமிழக விவசாயிகள் சங்க மாநில துணைத்தலைவர் ராமகவுண்டர், விவசாயிகள் கடந்த ஆண்டும் பயிருக்கான காப்பீடுத் தொகைகளை செலுத்தினர். ஆனால் வறட்சியால் கரும்பு போன்ற பயிர்கள் அழிந்துபோயின. இதனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடுத் தொகை வழங்கப்படவில்லை.

தற்போது காவேரிப்பட்டணம் பகுதியில் நோய் தாக்குதலினால் நெல் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. அந்த விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

பட்டு வளர்ச்சித் துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் ஆத்மா திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு தெரிவிப்பதில்லை. விவசாயிகளுக்கு முன்னறிவிப்பு செய்யாமல் கால்நடை மருத்துவ முகாம்கள் நடைபெறுகின்றன. இதனால் விவசாயிகள் பங்கேற்க இயலாத

நிலை உள்ளது. அஞ்செட்டி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம விவசாயிகள் வேளாண் இடுபொருட்களை வாங்க தளி செல்ல வேண்டி உள்ளது. எனவே அஞ்செட்டியில் வேளாண் கிடங்கு அமைக்க வேண்டும். கும்மனூர் ஆலப்பட்டியில் கால்நடை மருந்தகங்களை அமைக்க வேண்டும். ஏரியில் விவசாய பயன்பாட்டுக்காக மண் எடுக்க அனுமதிக்க வேண்டும். கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்படும் பால் நிலுவைத் தொகையை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.

கோரிக்கைகளை பரிசீலனை செய்த ஆட்சியர், சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கும்படி உத்தரவிட்டார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.பிரபாகர், வேளாண் இணை இயக்குநர் கா.ராஜன் உள்ளிட்ட அலுவலர்கள் பங்கேற்றனர்.

**வேளாண் தொழில் நுட்ப கல்லூரிக்கான பூமி பூஜை**

First Published : 29 Oct 2010 10:08:19 AM IST

பெரியகுளம், அக். 28:பெரியகுளம் அருகே வேளாண் தொழில் நுட்பக் கல்லூரிக்கான பூமி பூஜை வியாழக்கிழமை நடைபெற்றது.

பெரியகுளம் அருகே உள்ள குள்ளப்புரம் பகுதியில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஸ்ரீகிருஷ்ணா கல்வி அறக்கட்டளை சார்பில் வேளாண் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்கப்பட உள்ளது.

இக்கல்லூரியின் கட்டட பணிகளுக்கான பூமி பூஜை வியாழக்கிழமை நடைபெற்றது. இதில் மாவட்ட முதன்மை நீதிபதி சிவானந்தஜோதி, முன்னாள் துணை

வேந்தர்கள் ராஜகோபாலன், அப்துல்கரிம், ராமசாமி, முருகேசபூபதி மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்கள் வி.எல்.கே.ஜெயபாலன்(லட்சுமிபுரம்), பி.பூங்கொடி பிச்சைமணி(ஏ.வாடிப்பட்டி) உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். முன்னதாக கல்லூரி நிர்வாகிகள் கே.பலராமன், விக்ரம் வரவேற்றனர்.

வரும் கல்வி ஆண்டிலிருந்து வேளாண் பொறியியல், தோட்டக் கலை, வேளாண் ஊரக மேம்பாடு, உணவுப் பதப்படுத்துதல் ஆகிய பட்டப் படிப்புகள் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் ஒப்புதலுடன் தொடங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என இக்கல்லூரியின் நிர்வாகிகள் தெரிவித்தனர்.

**ஆடு வளர்ப்போர் நலவாரியம் அமைப்பு**

First Published : 30 Oct 2010 11:36:12 AM IST

திண்டுக்கல், அக். 29: திண்டுக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், ஆடு வளர்ப்போர் நல வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆடு வளர்ப்பை மேம்படுத்தவும், ஆடு வளர்ப்போர் மற்றும் ஆடு மேய்ப்பவர் நலம் காக்கவும், ஆடு வளர்ப்போர் நலவாரியம் அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. அதன்படி, 5 ஆடுகளுக்கு குறையாது வைத்திருக்கும் ஆடு வளர்ப்பவர்கள், ஆடு மேய்ப்பதைத் தொழிலாகக்க் கொண்டவர்கள் இதில் உறுப்பினராகச் சேரத் தகுதி உடையவர்களாவர். 1.4.2010-ல் 18 வயதுக்கு மேற்பட்டும், 65 வயதுக்கு உள்பட்டவர்களாகவும் இருக்கவேண்டும். வேறு எந்த வாரியத்திலும் உறுப்பினர்களாக இருக்கக் கூடாது.

உறுப்பினர் சேர்க்கை கால்நடை மருந்தகங்களில் நடைபெற்று வருகிறது. கால்நடை வளர்ப்போர் வாரியத்தில் சேர்ந்து, அரசு வழங்கும் உதவிகளைப் பெற்றுப் பயனடையுமாறு, ஆட்சியர் மா. வள்ளலார் தெரிவித்துள்ளார்.

தினமலர்

**பருத்தியில் பயிர் ஊக்கி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2010,02:55 IST

மதுரை:மதுரை விநாயகபுரம் நீர்மேலாண்மை பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் காதிரி வெளியிட்ட அறிக்கை :மதுரை மாவட்டத்தில் மானாவாரியாக பருத்தி பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பயிர்கள் வளர்ச்சிப் பருவத்திலிருந்து, சப்பைக் கட்டும் நிலையில் உள்ளன. சப்பைகள், பூக்கள், இளங்காய்கள் உதிர்வதை தடுக்க, பயிர் வளர்ச்சி ஊக்கியான ஹார்மோன்கள் அவசியம். வேளாண் பல்கலை மூலம் தயாரிக்கப்படும் "காட்டன் பிளஸ்' என்ற பயிர் வளர்ச்சி ஊக்கியை பயன்படுத்தலாம். ஏக்கருக்கு 2.2 கிலோ ஊக்கியை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, சப்பை கட்டும் பருவம், பூ, காய் உருவாகும் பருவங்களில் தெளிக்க வேண்டும். கோவையில் உள்ள வேளாண் பல்கலை, பயிர் வினையியல் துறைத் தலைவரை அணுகி, பயிர் வளர்ச்சி ஊக்கியை வாங்கலாம், என தெரிவித்துள்ளார்

**முந்திரி ஒட்டுக்கன்றுகள்விவசாயிகளுக்கு சலுகை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2010,23:13 IST

சிவகங்கை:""முந்திரி சாகுபடியை ஊக்குவிக்க, இரண்டு லட்சம் ஒட்டு கன்றுகள் வழங்கப்படும்," என தோட்டக்கலை துணை இயக்குனர் இருளப்பன் தெரிவித்தார்.அவர் கூறியதாவது:மாவட்டத்தில் மண் வளம், மழை அளவுக்கு ஏற்ற பயிர் முந்திரி. நல்ல வடிகால் வசதியுள்ள செம்மண் பகுதியில் இதை பயிரிடலாம். நீர்தேங்கும் பகுதி மற்றும் களர் உவர் நிலங்கள் ஏற்றது அல்ல. ஆண்டுக்கு 400 முதல் 500 மி.மீ., வரை மழை பெய்யும் பகுதி ஏற்றது. வறட்சியை நன்கு தாங்கி வளரக்கூடியது. முந்திரி கன்றுகளை நடவு செய்ய நவம்பர் வரை ஏற்ற பருவம். வி.ஆர்.ஐ.2,3,4 ரகத்தை நடலாம். தேவகோட்டை, நேமம் அரசு பண்ணையில் 3 லட்சம் ஒட்டு கன்றுகள் உற்பத்தியாகியுள்ளன. மொத்தம் 1,500 ஏக்கரில் சாகுபடி செய்யப்படும். இதில் 500 ஏக்கரில் பரப்பில் குறைந்த இடைவெளியான நெருக்க நடவு முறையிலும், மீதமுள்ள 1,000 ஏக்கரில் இயல்பான நடவும் செய்யப்படும்.

ஒரு ஏக்கருக்கு 200 ஒட்டு கன்றுகள், அதற்குரிய மண்புழு, உயர் உரங்கள், பவுடர் பாதுகாப்பு மருந்துகள் இலவசமாக வழங்கப்படும். இவ்வாறு நெருக்க நடவுமுறையில், சொட்டு நீர் பாசனம் அவசியம் என்பதால் நுண்ணீர்ப் பாசன திட்டத்தின் கீழ், 65 சதவீத மானியத்தில் சொட்டு நீர் பாசனம் அமைத்து தரப்படும். இயல்பான நடவுமுறையில் ஏக்கருக்கு, 80 கன்றுகள் மற்றும் அவற்றிற்குரிய இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்படும். தோட்டக்கலை இயக்க திட்டத்தின் கீழ் நெருக்க நடவுக்கு ஏக்கருக்கு 7,885; இயல்பான நடவுக்கு 4,800 ரூபாய் மானியம் தரப்படும், என்றார்.

**கத்தரி, சின்ன வெங்காயம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,22:36 IST

காரைக்குடி : கழனிவாசல் வாரச்சந்தையில் கத்திரிக்காய், சின்ன வெங்காயம் விலை உயர்ந்தது. விலை விபரம் (கிலோ): தக்காளி- 10, கத்திரிக்காய் - 40, பாகற்காய்- 20, முருங்கை பீன்ஸ்- 40, வாழைக்காய் (4)- 5, உருளை- 20, கேரட்- 32.முள்ளங்கி- 32, நூக்கல் - 28, பட்டர் பீன்ஸ்- 80, சோயா பீன்ஸ்- 60, பீட்ரூட்- 20, சவ்சவ் (3)- 10, சின்ன வெங்காயம்- 20, பெல்லாரி- 15, பாகற்காய் - 20, கருணைக்கிழங்கு - 20, கருணை (பெரியது) - 10.
வாழை தண்டு (1)- 5, சேனை கிழங்கு- 30, பச்சை மிளகாய்- 20, எலுமிச்சை (1)- 2, சீனி அவரை-

20, அவரை- 32, பீக்கங்காய் - 35, தேங்காய் (1)- 10, இஞ்சி - 80, காலி பிளவர் (1)- 10. மலைப்பூண்டு- 200, சாதாப்பூண்டு- 120, புடலை- 20.பழங்கள்: ஆப்பிள்- 70, ஆரஞ்ச்- 40, திராட்சை- 30, அன்னாசி பழம் (1)- 25, மாதுளை- 80, சீத்தாப்பழம்- 60, கொய்யா- 40, வாழைப் பழம் (1)- 2 ரூபாய் 50 காசு.நாட்டு கத்திரிக்காய், சின்ன வெங்காயம் (உடுமலை), கடந்த வாரத்தை விட விலை அதிகரித்தது.

**கரும்பு விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ்., சேவை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2010,02:10 IST

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகளுக்கு எஸ்.எம்.எஸ்., சேவை துவக்கம் நடந்தது. கள்ளக்குறிச்சி 2 கூட்டுறவு சர்க்கரை ஆலை சார் பில் கரும்பு விவசாயி களுக்கு குறுந்தகவல்(எஸ். எம்.எஸ்) சேவை துவக்கி வைக்கப்பட்டது. சர்க் கரை ஆலை ஆட்சியர் சேகர் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். சர்க் கரை இணைய முதுநிலை தலைமை கரும்பு அலுவலர் சேரலாதன், சென்னை தமிழ்நாடு சர்க்கரை கழக கணினி பகுப்பாளர் உமாகாந்தம் முன்னிலை வகித்தனர். இச்சேவையின் மூலம் ஆலையின் தினசரி அரவை, சப்ளை செய்யும் கரும்பு, கரும்பு கிரய பட்டுவாடா, கரும்பு பதிவு மற்றும் வெட்டு உத்தரவு முன்னுரிமை, கரும்பு சாகுபடி மற் றும் பயிர் பாதுகாப்பு விபரங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ளலாம்.

ஒவ்வொரு அரவைப் பருவத்திற்கும் கரும்பு விவ சாயிகளுக்கு 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட எஸ். எம்.எஸ்.,கள் அனுப்ப உள் ளனர். ஆலையின் கரும்பு பெருக்கு அலுவலர் அன் றன் சேவியர் அருள், துணை தலைமை பொறியா ளர் (பொறுப்பு) சிதம் பரம், துணை தலைமை ரசாயனர் (பொறுப்பு) கார்த்தி கேயன், அலுவலக மேலா ளர்(பொறுப்பு) மதி யழ கன், கணக்கர் ராஜாராமன் கலந்து கொண்டனர்.

**செம்மை கரும்பு சாகுபடி தொழில் நுட்பம் : வேளாண் துறை அறிவுரை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,23:57 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் முன்பருவ கரும்பு சாகுபடி துவங்க உள்ளது. இத்தருணத்தில் கரும்பு சாகுபடியில் செம்மை சாகுபடி முறையை பின்பற்ற வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.

தர்மபுரி உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில் 30,000 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. கரும்புகள் பாலக்கோடு தர்மபுரி

மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை, அரூர் சுப்பிரமணிய சிவ கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் செங்கம் பண்ணாரி அம்மன் கூட்டுறவு சர்க்கரை ஆலை, செங்கம் பண்ணாரி அம்மன் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகளுக்கு சர்க்கரை உற்பத்திக்கு செல்கிறது.

மேலும் 100க்கும் மேற்பட்ட தனியார் வெல்லம் தயாரிக்கும் தொழிற்சாலை இந்த கரும்பால் பயனடைகின்றனர். இம்மாவட்டத்தில் நிலவும் சீதோஷ்ண நிலை கரும்பு சாகுபடிக்கு உகந்ததாக உள்ளது மேலும் சர்க்கரை கட்டுமானம் கூடுதலாகவும் கிடைப்பதால் மற்ற மாவட்டங்களை கரும்புக்கு வழங்கப்படும் விலையை விட தர்மபுரி மாவட்ட விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் மூலம் கூடுதல் விலை கிடைக்கிறது.

பருவ நிலை மாற்றங்கள், முறையற்ற சாகுபடி முறைகள், பூச்சிநோய் தாக்குதலுக்கு போதிய பயிர் பாதுகாப்பு இல்லாமை ஆகியவை கரும்பு விளைச்சலை வெகுவாக பாதிக்கிறது.சராசரியாக ஏக்கருக்கு 40 மெட்ரிக் டன்னுக்கும் குறைவாக மகசூல் பெறுகின்றனர். இந்நிலையை தவிக்க செம்மை கரும்பு சாகுபடி முறை மிகச்சிறந்த முறையாகும்.

செம்மை கரும்பு சாகுபடி முறையில் ஒரு விதைப்பரு சீவல்களிலிருந்து நாற்றங்கால் அமைத்தல், இளம் நாற்றுகளை (25 முதல் 35 நாட்கள் வரை) எடுத்து நடவு செய்தல், அதிக இடைவெளியில் நடவு செய்தல், தேவையான அளவு மட்டும் நீர்பாய்ச்சுதல், இயற்கை சார்ந்த உரங்கள் பயிர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு முறைகளுக்கு போதிய அளவு முக்கியத்துவம் அளித்தல், ஊடுபயிர் சாகுபடி மூலம் மண்வளம் மற்றும் மகசூல் அதிகரித்தல் ஆகியவைளை செம்மை கரும்பு சாகுபடியின் கோட்டுபாடுகள் ஆகும்.

நாற்றங்கால் சாதாரணமாக கரும்பு நடவுக்கு 2 அல்லது 3 பருவ விதைக்கரணைகள் பயன்படுத்தப்படுகிறது. செம்மை கரும்பு சாகுபடி முறையில் ஒரு விதைப்பருவை கரும்பில் இருந்து அரைவட்ட வடிவில் வெட்டி எடுத்து தரமான அச்சீவல்களை கொண்டு "பரோடிரே' எனப்படும் குழித்தட்டுகளில் மக்கிய தென்னை நார்கழிவை பயன்படுத்தி நாற்றங்கால் அமைக்கப்படுகிறது.இதன் மூலம் அதிகளவு முளைப்புத்திறனை குறைந்த நாட்களில் அடைய முடிகிறது.

நாற்றங்காலில் நாற்றுகள் 25 முதல் 30 நாட்கள் வயது அடைந்தவுடன் வேர்ப்பகுதியில் உள்ள தென்னைநார் கழிவுடன் சேர்த்து நடவு செய்ய வேண்டும். அச்சமயம் 4 முதல் 6 இலைகள் கொண்டவையாக இருக்கும். சாதாரண முறையில் 2 மாதங்களில் அடையப்படும் வளர்ச்சியானது இம்முறையில் ஒரே மாதத்தில் அடைகிறது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**நெல்லில் புகையான் நோய் தாக்குதல் : இழப்பீடு வழங்க கோரிக்கை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2010,00:25 IST

கிருஷ்ணகிரி: ""கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சம்பா பருவத்தில் நெல்லில் புகையான் நோய் தாக்குதல் அதிகரித்ததால் பாதிப்படைந்த விவாயிகளுக்கு இன்சூரன்ஸ் திட்டம் மூலம் இழப்பீட்டு தொகை வழங்க வேண்டும்," என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை வைத்தனர்.கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில், கலெக்டர் அருண்ராய் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., பிரபாகர், வேளாண் இணை இயக்குனர் ராஜன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) நாச்சியப்பன் வேளாண் அலுவலர் பச்சையப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:
தோப்பையன்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் சம்பா பருவதில் சாகுபடி செய்யப்பட்ட நெல் பயிரில் புகையான் நோய் தாக்குதல் அதிகரித்ததால் ஆயிரம் ஏக்கருக் மேல் நெல் சாகுபடி முற்றிலும் பாதிப்படைந்தது. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இன்சூரன்ஸ் திட்டம் மூலம் உரிய இழப்பீடு தொகை வழங்க வேண்டும்.
கலெக்டர் அருண்ராய்: புகையான் நோய் தாக்கி பாதிகப்பட்ட நெல் வயல்கள் குறித்து வேளாண் துறை, வருவாய் துறை மற்றும் புள்ளியில் துறை அதிகாரிகளை கொண்டு வரும் நவம்பர் 1ம் தேதி முதல் கள ஆய்வு செய்யப்படும். நோயால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் அந்தந்த பகுதியல் உள்ள தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் இன்சூரன்ஸ் பிரிமியம் தொகையை செலுத்த வேண்டும். அதன் பிறகு தேசிய வேளான் காப்பீடு திட்டம் மூலம் உரிய இழப்பீட்டு தொகை வழங்கப்படும்.

ராமகவுண்டர்: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடை சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தும் போது அந்த பகுதி பொதுமக்களுக்கு அதிகாரிகள் முன்கூட்டியே தெரிவிப்பதில்லை.
கலெக்டர் அருண்ராய்: கிராமபகுதிகளில் கால்நடை மருத்துவ முகாம்களை நடத்துவதற்கு ஒரு வாரத்துக்கு முன் அந்த பகுதியில் துண்டு பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் அச்சடித்து பொதுமக்கள் அதிகம் கூடும் ரேஷன் கடை போன்ற இடங்களில் ஒட்ட வேண்டும்.
கிருஷ்ணன்: காவேரிப்பட்டணம் மற்றும் போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் அதிக பரப்பில் நெல் சாகுபடி செய்யவதால் போச்சம்பள்ளி பகுதியில் நெல் கொள் முதல் நிலையம் அமைக்க வேண்டும்.
கலெக்டர் அருண்ராய்: தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் மூலம் போச்சம்பள்ளியில்

நெல் கொள் முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
விவேகானந்தன்: போதி மழை இல்லாததால் ஊத்தங்கரை தாலுகாவில் பல ஏரிகள் வறண்டுள்ளது. தென் பெண்ணை ஆற்றங்கரையில் இருந்து வெளியேறு உபரி நீரை வறண்ட ஏரிகளுக்கு கால்வாய் வெட்டி திருப்பி விடவேண்டும்.
கலெக்டர் அருண்ராய்: ஏரிகளை இணைக்க கால்வாய் வெட்டுவது குறித்து பொதுப்பணித்துறையினரை கொண்டு ஆய்வு செய்து அதன் அறிக்கையை அரசிடம் சமர்பிக்கப்படும். அரசு உத்தரவு கிடைத்ததும் கால்வாய் வெட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
இவ்வாறு விவாதம் நடந்தது.

**விவசாயிகளுக்கு வேளாண்துறை ஆலோசனை**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2010,01:50 IST

மடத்துக்குளம் : பருவநிலை மாற்றத்தின் காரணமாக விளைநிலத்திலுள்ள பயிர்களை பல்வேறு பூச்சிகளும், நோய்களும் தாக்காமல் இருக்க வேளாண்மைத்துறையினர் ஆலோசனை கூறியுள்ளனர்.

மடத்துக்குளம் வேளாண்மை உதவி இயக்குனர் கவிதா வெளியிட்டுள்ள அறிக்கை: மடத்துக்குளம் வட்டாரத்தில் பல ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கரும்பு பயிர்களில் மாவுப்பூச்சி உள்ளிட்ட பல்வேறு நோய்த்தாக்குதலின் அறிகுறிகள் தென்பட்டு வருகின்றன. கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் எச்சரிக்கை உணர்வுடன் செயல்பட்டு நோய்களை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் நீரில் புரோப்பினோபாஸ் 50 இசி இரண்டு மி.லி., வேப்பெண்ணெய் பூச்சிக்கொல்லி இரண்டு மி.லி., ஒட்டுபசை தேவையான அளவு கலந்து பயிர்களுக்கு தெளிக்க வேண்டும். இதை நோய் ஆரம்ப அறிகுறிகள் தென்படும் போது பின்பற்ற வேண்டும், கூடுதல் தகவல் வேண்டுவோர் மடத்துக்குளம் வோண்மைத்துறையினரை அணுகலாம் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

**வெங்காயம் விலை வீழ்ச்சிகண்ணீரில் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2010,22:20 IST

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவி.,யில் வெங்காயம் விலை வீழ்ச்சி அடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.பிள்ளையார்நத்தம், பூவாணி, மல்லி, மீனாட்சிபுரம், கிருஷ்ணன்கோவில் பகுதியில் விவசாயிகள் வெங்காயம் விவசாயம் செய்து வருகின்றனர். கடந்த ஓராண்டாக சரிவர மழை இல்லாத சூழ்நிலையிலும் கிணற்றில் கிடைக்கும் ஓரளவு தண்ணீரை கொண்டு விவசாயம்

செய்து வந்தனர். தீபாவளி சீசன் ஆரம்பித்த நிலையிலும் கிலோ 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கடந்தாண்டு இதே சீசனில் 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இதற்குதிண்டுக்கல், மதுரை, போன்ற இடங்களிலிருந்து வெங்காயம் வரத்து அதிகரிப்பே காரணம் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**ஏறுமுகத்தில் எண்ணெய், சர்க்கரை விலைவிழுகிறது உளுந்தம், துவரம் பருப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2010,22:21 IST

விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில் சர்க்கரை விலை மூடைக்கு 50 ரூபாயும், கடலெண்ணெய் டின்னுக்கு 60ம், சூரிய காந்தி எண்ணெய் 80ம், பாமாயில் 40 ரூபாயும் உயர்ந்துள்ளது. நயம் உளுந்தம் பருப்பு மூடைக்கு 800ம், துவரம் பருப்பு 200 ரூபாயும் குறைந்துள்ளது.விருதுநகரில் கடந்த வாரம் சர்க்கரை விலை மூடைக்கு 2,695 ரூபாயாக இருந்தது.

தற்போது 2,745 ரூபாயாகவும், 1,040 ஆக இருந்த சூரிய காந்தி எண்ணெய் 1,120 ஆகவும், 765 ஆக இருந்த பாமாயில் 805ரூபாயாகவும் உள்ளது. 3,600 ரூபாயாக இருந்த நிலக்கடலைப் பருப்பு 3,500 ஆகவும், 2,600 ஆக இருந்த கடலைப் புண்ணாக்கு 2,400 ரூபாயாகவும் உள்ளது.நயம் உளுந்து விலை மூடைக்கு 4,400 ரூபாயிலிருந்து 4,500 வரையும், சுமார் ரக உளுந்து 3,900த்திலிருந்து 4,000 வரையும், 5,200 ரூபாயாக இருந்த பர்மா பருவட்டு உளுந்து 5,000 ரூபாயாகவும் உள்ளது.

6,800 ரூபாயாக இருந்த நயம் உளுந்தம் பருப்பு 6,000 ஆகவும், 6,000 ஆக இருந்த பொடி உளுந்தம் பருப்பு 5,500 ரூபாயாகவும் உள்ளது. 4,100 ரூபாயாக இருந்த நயம் துவரை 3,900 ஆகவும், 3,300 ஆக இருந்த பொடி துவரை 3,100 ஆகவும், 5,800 ஆக இருந்த நயம் துவரம் பருப்பு 5,600 ஆகவும், 4,800 ஆக இருந்த பொடி துவரம் பருப்பு 4,600 ரூபாயாகவும் உள்ளது. நயம் பாசிப்பயறு 4,100 ரூபாயிலிருந்து 4,200 வரையும், சுமார் ரகம் 3,800 ஆகவும், நயம் பாசிப்பருப்பு 5,400 லிருந்து 5,500 வரையும், சுமார் ரகம் 5,200 ரூபாயாகவும் உள்ளது.

2,450 ரூபாயாக இருந்த கொண்டைக்கடலை 2,550 ஆகவும், 1,910 ஆக இருந்த பொரிகடலை 1,970 ரூபாயாகவும் உள்ளது.சம்பா மிளகாய் வத்தல் விலை குவிண்டாலுக்கு 3,000 ரூபாயிலிருந்து 3,250 வரையும், சங்கரன்கோவில் வத்தல் 4,500 லிருந்து 4,750 வரையும், முண்டு வத்தல் 3,000த்திலிருந்து 3,500 ரூபாய் வரையும் உள்ளது. புது சோடை வத்தல் 2,500 ரூபாயாகவும், பழைய சோடை வத்தல் 2,000 ரூபாயாகவும் உள்ளது.

**கால்நடை வளர்ப்பு பயிற்சி வகுப்பு**

அக்டோபர் 30,2010,00:00  IST

புதுச்சேரி: புதுச்சேரி கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறையில் "கால்நடை வளர்ப்பு' குறித்த பயிற்சி வகுப்பு நடந்தது. இயக்குனர்  டாக்டர் தோமினிக் சேவியோ ஜெகம் வரவேற்றார். கால்நடைகளை தாக்கும் நோய் தடுப்பு முறைகள் பற்றி டாக்டர் கிரிபாபா மெஹ்ரா விளக்கினார். தவளகுப்பம் கால்நடை மருத்துவர்கள் சாந்தி, சரளாதேவி, அருண்குமார் ஆகியோர் கால்நடை விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர். பயிற்சி முகாமில் வாழைக்குளம், தேங்காய்திட்டு, முருங்கப்பாக்கம், கொம்பாக்கம் உள்ளிட்ட பகுதியை சேர்ந்த 50 கால்நடை விவசாயிகள் கலந்து கொண்டனர்.  பயிற்சி முகாமில் கலந்து கொண்ட கால்நடை விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக 100 ரூபாய் வழங்கப்பட்டது. கால்நடை மருந்தகம் டாக்டர் மரியா நன்றி கூறினார்.

**பயிர் காப்பீடு செய்ய வாய்ப்பு: டிச.15க்குள் சேர வேண்டும்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,22:36 IST

சிவகங்கை : ""சம்பா பருவ நெல்லுக்கு விவசாயிகள் காப்பீடு செய்யலாம்,'' என தேசிய வேளாண் காப்பீடு திட்ட மண்டல மேலாளர் அன்பரசு தெரிவித்தார்.அவர் கூறியதாவது: நடப்பு ஆண்டில் சம்பா நெல்லுக்கு பயிர் கடன் பெறாத விவசாயிகள், காப்பீடு திட்டத்தில் சேர டிச., 15 ம் தேதி கடைசி நாள். ஏக்கருக்கு சாதாரண பிரீமியம், மானியம் போக, சிறு, குறு விவசாயிகளுக்கு 117 ரூபாய்; பிறருக்கு 130 ரூபாய்.

இதன் கப்பீடு மதிப்பு 13,024 ரூபாய். பயிர் கடன் பெறாத விவசாயிகள், விருப்பத்தின்படி கூடுதல் பிரீமியம் செலுத்தினால், பலன் அதிகம் பெறலாம். கூடுதல் பிரீமியமாக சிறு, குறு விவசாயிகள் 456, பிறர் 507 ரூபாய் செலுத்த வேண்டும். இதன் மதிப்பு 11,396 ரூபாய். சாதாரண, கூடுதல் மதிப்பு 24,420 ரூபாய். இவை இரண்டிற்கும் சேர்த்து ஏக்கருக்கு 574 ரூபாய் செலுத்த வேண்டும். பிற விவசாயிகளுக்கு 637. வங்கி, தொடக்க விவசாய கூட்டுறவு வங்கி, விவசாய துறையில் காப்பீடு விண்ணப்பத்தை கொடுக்க வேண்டும். நிலம், பயிர் விபரத்தை வங்கியில் தெரிவிக்க வேண்டும். பிரீமிய தொகையை கடைசி தேதிக்கு முன் செலுத்த வேண்டும், என்றார்.

**கத்தரி, சின்ன வெங்காயம் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,22:36 IST

காரைக்குடி : கழனிவாசல் வாரச்சந்தையில் கத்திரிக்காய், சின்ன வெங்காயம் விலை உயர்ந்தது. விலை விபரம் (கிலோ): தக்காளி- 10, கத்திரிக்காய் - 40, பாகற்காய்- 20, முருங்கை பீன்ஸ்- 40, வாழைக்காய் (4)- 5, உருளை- 20, கேரட்- 32.முள்ளங்கி- 32, நூக்கல் - 28, பட்டர் பீன்ஸ்- 80, சோயா பீன்ஸ்- 60, பீட்ரூட்- 20, சவ்சவ் (3)- 10, சின்ன வெங்காயம்- 20, பெல்லாரி- 15, பாகற்காய் - 20, கருணைக்கிழங்கு - 20, கருணை (பெரியது) - 10.வாழை தண்டு (1)- 5, சேனை கிழங்கு- 30, பச்சை மிளகாய்- 20, எலுமிச்சை (1)- 2, சீனி அவரை- 20, அவரை- 32, பீக்கங்காய் - 35, தேங்காய் (1)- 10, இஞ்சி - 80, காலி பிளவர் (1)- 10. மலைப்பூண்டு- 200, சாதாப்பூண்டு- 120, புடலை- 20.பழங்கள்: ஆப்பிள்- 70, ஆரஞ்ச்- 40, திராட்சை- 30, அன்னாசி பழம் (1)- 25, மாதுளை- 80, சீத்தாப்பழம்- 60, கொய்யா- 40, வாழைப் பழம் (1)- 2 ரூபாய் 50 காசு.நாட்டு கத்திரிக்காய், சின்ன வெங்காயம் (உடுமலை), கடந்த வாரத்தை விட விலை அதிகரித்தது.

**தேங்காய் வியாபாரிகள் கொண்டாட்டம் : விவசாயிகள் திண்டாட்டம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,22:37 IST

மானாமதுரை : தேங்காய் விலை விண்ணை தொடும் அளவுக்கு உயர்ந்து வருகிறது. ஆனால், உரிய விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் புலம்புகின்றனர்.மானாமதுரை, திருப்புவனம் பகுதிகளில் 500 ஏக்கருக்கு மேல் தேங்காய் விவசாயம் நடக்கிறது. கடந்த சில வருடங்களாக மழைப்பொழிவு குறைவு, நோய் தாக்குதல், விளைச்சல் பாதிப்பால் விலை குறைந்தது. சிலர், மரங்களை குத்தகைக்கு விட்டுள்ளனர்.இங்கு தேங்காய் வரத்து குறைந்ததால், கன்னியாகுமரி, பொள்ளாச்சி பகுதிகளிலிருந்து, வியாபாரிகள் தேங்காய் கொள்முதல் செய்தனர்.

தற்போது அங்கிருந்தும் வரத்து குறைந்து விட்டதால், சிறிய ரக தேங்காய் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சற்று பெரிய ரகம் 15 ரூபாய்.விலை உயர்ந்தும், விவசாயிகளுக்கு அதன் பயன் கிடைக்கவில்லை. "வியாபாரிகள் குறைந்து விலைக்கு கொள்முதல் செய்து, அதிக விலைக்கு விற்கின்றனர்' என விவசாயிகள் புலம்புகின்றனர். இதுகுறித்து முத்தனேந்தலை சேர்ந்த பாண்டி கூறுகையில், ""ஆயிரம் காய்க்கு 5,000 ரூபாய் தான், வியாபாரிகள் தருகின்றனர். நூறுக்கு, ஐந்து காய் இலவசமாக கொடுக்க வேண்டும். பல ஆண்டுக்கு முன் கொடுத்த தொகையை தான் இப்போதும் தருகின்றனர். மாவட்டத்தில் தென்னை விவசாயத்தை காக்க, அரசு முன் வர வேண்டும்," என்றார்.

**சர்க்கரை விலை உயர்வு: கரும்பு விவசாயிகள் அதிருப்தி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 30,2010,00:49 IST

நெல்லிக்குப்பம்: சர்க்கரை ஆலை மூலம் கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும் சர்க்கரை விலை உயர்ந்ததால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். கடலூர் மாவட்டம் நெல்லிக்குப்பம் இ.ஐ.டி., பாரி சர்க்கரை ஆலைக்கு பல ஆயிரம் விவசாயிகள் கரும்பு சப்ளை செய்கின்றனர். ஆண்டுதோறும் குறைந்தது 10 லட்சம் டன் கரும்பு அறவை நடக்கிறது. ஒரு டன் கரும்பு சப்ளை செய்தால் விவசாயிகளுக்கு ரேஷன் கடை விலையில் அரை கிலோ சர்க்கரை ஆலை நிர்வாகம் வழங்கி வருகிறது. கடந்த ஆண்டு ரேஷன் கடை விலையான 13.50 ரூபாயுடன் வாகன வாடகை ஒரு ரூபாய் சேர்த்து 14.50க்கு வழங்கினர்.நடப்பு ஆண்டு ரேஷன் கடையில் கிலோ சர்க்கரை 13.50க்கு விற்பனையானாலும் விவசாயிகளிடம் 19.20 வசூல் செய்கின்றனர்.

ரேஷன் கடையை விட 5.70க்கு கூடுதலாக இருப்பதால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர். இது குறித்து ஆலை நிர்வாகிகள் கூறியதாவது: ஒவ்வொரு ஆலையும் உற்பத்தியில் 10 சதவீதம் சர்க்கரையை ரேஷன் கடைக்கு அரசாங்கம் நிர்ணயிக்கும் விலைக்கு வழங்க வேண்டும். கடந்த ஆண்டு உற்பத்தி குறைந்ததால் 20 சதவீதம் வழங்க வேண்டுமென அரசு உத்தரவிட்டது. நடப்பு ஆண்டு உற்பத்தி அதிகரிக்கும் என்பதால் மீண்டும் 10 சதவீதம் மட்டும் வழங்கினால் போதும் உத்தரவு வரும் என எதிர்பார்க்கிறோம். கடந்த ஆண்டு அரசு ஆலைகளிடமிருந்து ஒரு கிலோ சர்க்கரையை 13.35க்கு வாங்கி ரேஷன் கடையில் 13.50க்கு வழங்கினர். நாங்கள் அரசு விலையை விட வாகன செலவு ஒரு ரூபாய் சேர்த்து 14.50க்கு விவசாயிகளுக்கு வழங்கினோம்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் முதல் அரசு ஒரு கிலோ சர்க்கரை 17.85க்கு கொள்முதல் செய்கிறது. ஆனால் கூடுதல் விலையை மானியமாக வழங்கி ரேஷன் கடையில் சர்க்கரை விலையை உயர்த்தாமல் மத்திய அரசு 13.50க்கு வழங்கி வருகிறது. நாங்கள் அரசு கொள்முதல் விலையுடன் வாகன செலவை சேர்த்து விவசாயிகளுக்கு 19.20க்கு வழங்குகிறோம். எப்போதும் போல் அரசு கொள்முதல் விலைக்கே விவசாயிகளுக்கு சர்க்கரை வழங்குகிறோம். ரேஷன் கடையில் மத்திய அரசு சர்க்கரை விலை உயர்த்தாததால் விவசாயிகளுக்கு உண்மை நிலவரம் தெரியவில்லை. அதிக பணம் நஷ்டமாகிறது என்பதால் பெரும்பாலான ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை வழங்குவதில்லை. அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அரசு கொள்முதல் விலைக்கே நாங்கள் வழங்குகிறோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## செம்மை கரும்பு சாகுபடி தொழில் நுட்பம் : வேளாண் துறை அறிவுரை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 29,2010,23:57 IST

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் முன்பருவ கரும்பு சாகுபடி துவங்க உள்ளது. இத்தருணத்தில் கரும்பு சாகுபடியில் செம்மை சாகுபடி முறையை பின்பற்ற வேளாண் துறை அறிவுரை வழங்கியுள்ளது.

தர்மபுரி உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குனர் மேகநாதன் கூறியதாவது: தர்மபுரி மாவட்டத்தில் 30,000 ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. கரும்புகள் பாலக்கோடு தர்மபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை, அரூர் சுப்பிரமணிய சிவ கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் செங்கம் பண்ணாரி அம்மன் கூட்டுறவு சர்க்கரை ஆலை, செங்கம் பண்ணாரி அம்மன் கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆகிய ஆலைகளுக்கு சர்க்கரை உற்பத்திக்கு செல்கிறது.

மேலும் 100க்கும் மேற்பட்ட தனியார் வெல்லம் தயாரிக்கும் தொழிற்சாலை இந்த கரும்பால் பயனடைகின்றனர். இம்மாவட்டத்தில் நிலவும் சீதோஷ்ண நிலை கரும்பு சாகுபடிக்கு உகந்ததாக உள்ளது மேலும் சர்க்கரை கட்டுமானம் கூடுதலாகவும் கிடைப்பதால் மற்ற மாவட்டங்களை கரும்புக்கு வழங்கப்படும் விலையை விட தர்மபுரி மாவட்ட விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலைகள் மூலம் கூடுதல் விலை கிடைக்கிறது.

பருவ நிலை மாற்றங்கள், முறையற்ற சாகுபடி முறைகள், பூச்சிநோய் தாக்குதலுக்கு போதிய பயிர் பாதுகாப்பு இல்லாமை ஆகியவை கரும்பு விளைச்சலை வெகுவாக பாதிக்கிறது.சராசரியாக ஏக்கருக்கு 40 மெட்ரிக் டன்னுக்கும் குறைவாக மகசூல் பெறுகின்றனர். இந்நிலையை தவிக்க செம்மை கரும்பு சாகுபடி முறை மிகச்சிறந்த முறையாகும்.

செம்மை கரும்பு சாகுபடி முறையில் ஒரு விதைப்பரு சீவல்களிலிருந்து நாற்றங்கால் அமைத்தல், இளம் நாற்றுகளை (25 முதல் 35 நாட்கள் வரை) எடுத்து நடவு செய்தல், அதிக இடைவெளியில் நடவு செய்தல், தேவையான அளவு மட்டும் நீர்பாய்ச்சுதல், இயற்கை சார்ந்த உரங்கள் பயிர் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு முறைகளுக்கு போதிய அளவு முக்கியத்துவம் அளித்தல், ஊடுபயிர் சாகுபடி மூலம் மண்வளம் மற்றும் மகசூல் அதிகரித்தல் ஆகியவைளை செம்மை கரும்பு சாகுபடியின் கோட்டுபாடுகள் ஆகும்.

நாற்றங்கால் சாதாரணமாக கரும்பு நடவுக்கு 2 அல்லது 3 பருவ விதைக்கரணைகள் பயன்படுத்தப்படுகிறது. செம்மை கரும்பு சாகுபடி முறையில் ஒரு விதைப்பருவை கரும்பில்

இருந்து அரைவட்ட வடிவில் வெட்டி எடுத்து தரமான அச்சீவல்களை கொண்டு "பரோடிரே' எனப்படும் குழித்தட்டுகளில் மக்கிய தென்னை நார்கழிவை பயன்படுத்தி நாற்றங்கால் அமைக்கப்படுகிறது.இதன் மூலம் அதிகளவு முளைப்புத்திறனை குறைந்த நாட்களில் அடைய முடிகிறது.

நாற்றங்காலில் நாற்றுகள் 25 முதல் 30 நாட்கள் வயது அடைந்தவுடன் வேர்ப்பகுதியில் உள்ள தென்னைநார் கழிவுடன் சேர்த்து நடவு செய்ய வேண்டும். அச்சமயம் 4 முதல் 6 இலைகள் கொண்டவையாக இருக்கும். சாதாரண முறையில் 2 மாதங்களில் அடையப்படும் வளர்ச்சியானது இம்முறையில் ஒரே மாதத்தில் அடைகிறது.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## *கோழி தீவனங்கள் விலை உயர்வால் முட்டை விலை உயர வாய்ப்பு*



*மாதவி சாலி – எஸ் சுஜாதா*

*சண்டிகார் / கோயம்புத்தூர்*

*கோழி தீவனங்கள் விலை அதிகரித்து வருவதால், முட்டை விலை 10 முதல் 15 சதவீதம் வரை உயர வாய்ப்புள்ளது என்று இத்துறையைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.*

*மக்காச்சோளம்*

*சென்ற ஆண்டின் இதே காலத்தில் ரூ.9,500–ஆக இருந்த ஒரு டன் மக்காச்சோளம்*

விலை தற்போது ரூ.11,000–ஆக உயர்ந்துள்ளது. கோழி தீவனத்தில், மக்காச்சோளத்தின் பயன்பாடு 50 சதவீதமாக உள்ளது.

இது குறித்து கோயம்புத்தூரைச் சேர்ந்த சுகுணா குழுமத்தின் நிர்வாக இயக்குனர் பீ.சவுந்தரராஜன் கூறும்போது, "நடப்பு ஆண்டில், மக்காச்சோளம் உற்பத்தி, சென்ற ஆண்டைக் காட்டிலும் 30 லட்சம் அதிகரித்து 1.95 கோடி டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதேசமயம், சர்வதேச அளவில் இதன் விலை மிகவும் உயர்ந்து வருகிறது. இதனையடுத்து, நம் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு 20 லட்சம் டன் மக்காச்சோளம் ஏற்றுமதியாக வாய்ப்புள்ளது. அப்போது, மக்காச்சோளம் விலை மேலும் உயரும். எனவே, கோழிப் பண்ணைகளின் செலவினம் அதிகரிக்கும். இதனால், முட்டை விலை உயரும்" என்று தெரிவித்தார்.

மேலும், சென்ற ஓர் ஆண்டில் சோயாபீன் விலையும் ரூ.18,000–த்திலிருந்து ரூ.19,500–ஆக அதிகரித்துள்ளது.

உற்பத்தி

நாட்டில் முட்டை உற்பத்தி 10 சதவீதம் அதிகரித்துள்ளது. தற்போது நாள் ஒன்றுக்கு 15.75 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்படுவதாக தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் பொது மேலாளர் எம்.பாட்டிவால் தெரிவித்தார்.

தற்போது, இந்தியாவில் தனிநபர் முட்டை பயன்பாடு ஆண்டுக்கு 53 என்ற அளவில் உள்ளது. இதனை 180–ஆக அதிகரிக்க வேண்டும் என தேசிய சத்துணவு அமைப்பு பரிந்துரை செய்துள்ளது.